## புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி சாதாரண கூட்டம் சுபகிருது வருடம் ஆவணி மாதம் **14ஆம் தேதி 2022-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30ஆம் தேதி செவ்வாய்கிழமை காலை 10.00 மணியளவில்** நகர்மன்ற கூட்ட அறையில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

**திரு.தி.ஜனார்த்தனன்,**
**நகர்மன்ற தலைவர்**
**புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி**

**பொருள் எண்.1**

இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட குத்தகை இனங்களுக்கு கீழ்க்கண்ட விபரப்படி உள்ள காலத்திற்கு 27.07.2022—ஆம் தேதியன்று மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. மேற்படி மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்தபட்ச ஏல கேள்வி கோரிய கீழ்கண்டுள்ள நபர்களுக்கு குத்தகை உரிமம் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | உரிமம் விவரம் | மறு ஏலத்தில் உயர்ந்த கேள்வி கேட்ட ஏலதாரர்களின் பெயர் | அரசு மதிப்பு தொகை ரூ. | மறு ஏலத்தில் கேட்கப் பட்ட உயர்ந்த ஏலக் கேள்வி தொகை ரூ. | மூடி முத்திரையிடப் பட்ட வரப்பட்ட ஒப்பந்தப் புள்ளியின் உயர்ந்த ஏல கேள்வி | குத்தகை காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | புன்செய் புளியம்பட்டி நகராட்சி தினசரி சந்தையில் சுங்கம் வசூலிக்கும் உரிமை மற்றும் மேற்படி சந்தையில் உள்ள கடை எண். 1 முதல் 50 வரை உள்ள கடைகளுக்கு தினசரி கட்டணம் வசூலிக்கும் உரிமம். | திரு. கே. சுரேஷ், | 1400000/— | 1415000/— | ஒப்பந்தப் புள்ளி ஏதும் வரவில்லை | 01.08.2022 முதல் 31.03.2023 வரை |
| 2 | பேருந்து நிலையத்தில் பேருந்து கட்டணம் வசூலிக்கும் உரிமம் | திரு.எம்.மாரிமுத்து | 210000/— | 225000/— | ஒப்பந்தப் புள்ளி ஏதும் வரவில்லை | 01.08.2022 முதல் 31.07.2025 வரை |
| 3 | பேருந்து நிலையத்தில் மிதி வண்டி மற்றும் இரு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி எவரும் கோரவில்லை. | | | | |
| 4 | வாரச்சந்தையில் உள்ள புளிய மரங்களின் மேற்பலனை அனுபவிக்கும் உரிமம். | மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி எவரும் கோரவில்லை. | | | | |

| | | |
|---|---|---|
| 5 | வாரச்சந்தையில் குப்பை சேகரிக்கும் உரிமம். | மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி எவரும் கோரவில்லை. |
| 6 | நகராட்சி அலுவலகம் திருமண மண்டபம் மற்றும் மேல்நிலைத் தொட்டி வளாகத்தில் உள்ள தென்னை மரங்களின் மேற்பலன் அனுபவிக்கும் உரிமை | மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி எவரும் கோரவில்லை. |

**(ந.க.எண்.1702/2020/அ1)**

அலுவலகக்குறிப்பு:

1) மேற்கண்ட குத்தகை இனங்களில் வரிசை எண். 1–ல் அரசு மதிப்பைவிட கூடுதலாக உள்ளதாலும், இந்த ஆண்டு 2022–2023–ஆம் ஆண்டு கேட்புத் தொகையை விட கூடுதலாக உள்ளதாலும், உயர்ந்த பட்ச ஏலக்கேள்வி தொகை கோரியுள்ள மேற்படி ஏலததாரருக்கு உரிமம் வழங்கலாம். மேலும், தினசரி சந்தைக்கென புதியதாக வாரச்சந்தையில் கட்டிடம் கட்டப்பட்டு வருவதால், இக்குத்தகை இனத்தை 01.08.2022 முதல் 31.03.2023 வரை அல்லது மேற்படி தினசரி சந்தையை புதிய வளாகத்திற்கு மாற்றம் செய்யப்படும் நாள் வரை குத்தகை அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட குத்தகை இனங்களில் வரிசை எண். 2–ல், அரசு மதிப்பைவிட கூடுதலாக உள்ளதாலும், சென்ற ஆண்டு மற்றும் மூன்றாண்டு சராசரி ஏலத்தொகையை காட்டிலும் கூடுதலாகவும், உள்ளதால், உயர்ந்த பட்ச ஏலக்கேள்வி தொகை கோரிய ஏலததாரருக்கு உரிமம் வழங்கலாம்.
3) மேற்கண்ட குத்தகை இனங்களில் வரிசை எண்.3, 4, 5, மற்றும் 6 ஆகிய நான்கு குத்தகை இனங்களுக்கு மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி எவரும் கோராததால், இக்குத்தகை இனங்களுக்கு மறு ஏலம் கோரலாம்.
4) வரிசை எண். 1 மற்றும் 2–க்கு உயர்ந்த பட்ச ஏலம் கோரிய ஏலதாரர்களுக்கு குத்தகை உரிமம் வழங்கியது அனுமதிக்கலாம்.

**27.7.2022–ஆம் தேதியன்று மேற்படி குத்தகையினங்களுக்கு கீழ்க்கண்டவாறு நகர்மன்ற தலைவர் அவர்களால் முன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.**

1) ஏல நோட்டீஸ் முறையாக ஏலம் எடுக்கும் நோக்கோடு உள்ள குத்தகை தாரர்களுக்கு சென்றடையவில்லை. ஏலம் விளம்பரம் செய்யப்படவில்லை அதனால் அதிகளவில் குத்தகைதாரர்கள் வரவில்லை. முன்பு உள்ள ஏலத்தை ரத்து செய்துவிட்டு அவசரகதியால் செய்ததால் தினசரி சந்தை ஏலத்தை ரத்து செய்து விட்டு முறையாக அறிவிப்பு வழங்கிவிட்டு ஏலம் நடத்தப்பட வேண்டும். 27.7.2022 அன்று நடந்த வரிசை எண் 1 ல் உள்ள தினசரி சந்தை ஏலம் ரத்து செய்யப்படுகிறது.
2) வரிசை எண்.2 ல் உள்ள பேருந்து நிலைய பஸ் கட்டணம் வசூல் உரிமம் அனுமதிக்கப்படுகிறது.
3) வரிசை எண்.3ல் உள்ள குத்தகை இனத்திற்க்கு மறு ஏலம் கோரலாம்.
4) வரிசை எண். 4 மற்றும் 6ல் உள்ள உரிம இனங்கள் எந்தவித பலன்தரும் மரங்களும் இல்லாத காரணத்தாலும், 18 முறை ஏலம்விடப்பட்டும் யாரும் எடுக்க சூழ்நிலை இல்லாத காரணத்தாலும் ஏல இனங்கள் ரத்து செய்யப்படுகிறது.
5) வரிசை எண் 5ல் உள்ள வாரச்சந்தை குப்பைகளில் அதிகளவில் பாலித்தீன் கழிவுகள் கலந்து வருவதால் விவசாயிகள் யாரும் ஏலம் எடுக்க வராத காரணத்தால் ஏல இனம் ரத்து செய்யப்படுகிறது.

அவசர அவசியம் கருதி மேற்கண்ட வரிசை எண்.1 முதல் 5 வரையுள்ள குத்தகையினங்களுக்கு நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**

**தீர்மான எண்.119**

**பொருள் எண்.2**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணியில் தனியார் ஒப்பந்த அடிப்படையில் 1 முதல் 6 வார்டுகளில் 41 தூய்மை பணியாளர்கள் விபிஎன் பில்டர்ஸ், ஒப்பந்ததாரர், திருப்பூர் அவர்களுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.4861/P3/2018 நாள்.28.02.2018 அனுமதியின் படி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.25/2016/எச்1 நாள்.06.06.2019ன் படி பணி ஆணை வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியானது ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.25/2016/எச்1 நாள்.30.06.2019ன் படி நீட்டிப்பு செய்து பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிக்கான ஒப்பந்த காலம் 30.04.2022 உடன் முடிவடைவதால் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளும் வரை மேலும் ஒரு மாதம் (01.07.2022 முதல் 31.07.2022 வரை) பணியினை நீட்டிப்பு செய்யப்பட்டது. தற்பொழுது மேலும் ஒரு மாதம் (01.08.2022 முதல் 31.08.2022 வரை) விபிஎன் பில்டர்ஸ், திருப்பூர் ஒப்பந்ததாரர் அவர்களை பணி செய்ய அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.25/2016/எச்1)

அலுவலகக்குறிப்பு :–

அ) மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) பொது சுகாதாரபிரிவு அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி நீட்டிப்பு செய்ததை மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.120**

**பொருள் எண்.3**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி ஈரோடு மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் பரவலாக காணப்படுகிறது. இருப்பினும் இந்நகராட்சி பகுதியில் இதுவரை டெங்கு காய்ச்சலால் பொதுமக்கள் பாதிக்கப்படாமல் தடுப்பு நடவடிக்கைகள் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் வாயிலாக திறம்பட மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியானது ஈரோடு மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் ஏற்படா வண்ணம் முற்றிலும் தடுக்கப்படும் வரை இப்பணியினை தொடர்ந்து மேற்கொள்வது அவசியமாகிறது. எனவே பொது சுகாதார அவசர அவசியம் கருதி 10 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் திரு.வி.ஜெயராஜ், ஒப்பந்ததாரர், புன்செய்ப் புளியம்பட்டி என்ற தனியார் மூலமாக நகர் மன்ற தீர்மான எண்.125 நாள்.29.05.2020ன் படி டெங்கு காய்ச்சல் தொற்று நோய் தடுப்புப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியினை தொடர்ந்து 01.08.2022 முதல் 31.08.2022 வரை திரு.வி.ஜெயராஜ், ஒப்பந்ததாரர் அவர்களுக்கு இப்பணியினை நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.447/2017/எச்1)

அலுவலகக்குறிப்பு :–

அ) மன்றம் அனுமதிக்கலாம்

ஆ)பொது சுகாதாரபிரிவு அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி நீட்டிப்பு செய்ததை மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.121**

**பொருள் எண்.4**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு பவானிசாகர் மற்றும் அண்ணா நகர் நீரேற்று நிலையங்களில் குடிநீர் பராமரிப்பு பணிக்காக நான்கு நபர்களை தனியார் மூலமாக பணி அமர்த்தி கொள்ளும் பணிக்கு திரு.வி.ஜெயராஜ் என்பவருக்கு நிபந்தனைகளுக்கு உட்பட்டு

இவ்வலுவலக செயல்முறை உத்திரவு ந.க.எண். இ1/387/2017 நாள்.27.05.2020ல், 01.06.2020 முதல் 31.05.2021 வரை ஓராண்டு ஒப்பந்த காலத்திற்கு நீட்டித்து பணி ஆணை வழங்கப்பட்டது. மேற்படி பணிக்கு புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோர கால தாமதம் ஆகும் என்பதால், குடிநீர் விநியோக பணி அத்தியாவசிய பணி என்பதால், இப்பணியின் அவசர அவசியம் கருதி தற்போதைய ஒப்பந்ததாரர் திரு.வி.ஜெயராஜ் என்பவருக்கு பழைய விலை விகிதத்தில் 01.07.2022 முதல் 31.07.2022 வரை ஒப்பந்த காலத்தை நீட்டித்து பணி ஆணை வழங்கப்பட்டது. தற்போது மேற்கண்ட ஒப்பந்தகாலம் 31.07.2022 உடன் முடிவடைவதால் குடிநீர் விநியோக பணி அத்தியாவசிய பணியாக உள்ளதாலும், தற்போதைய ஒப்பந்ததாரர் திரு.வி.ஜெயராஜ் என்பவருக்கு பழைய விலை விகிதத்தில் மேலும் ஒரு மாத காலத்திற்கு 01.08.2022 முதல் 31.08.2022 வரை ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்து குடிநீர் விநியோக பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க. எண்.387/2017/இ1)**

அலுவலக குறிப்பு:–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி நீட்டிப்பு செய்ததை மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.122**

<u>பொருள் எண்.5</u>

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரை நாள்.20.07.2022ல் குடிநீர் வழங்கல் மற்றும் தொடர்புடைய கட்டமைப்புகளை இயக்கி பராமரித்தல் பணிகளை திறம்பட செய்திட ஒப்பந்த அடிப்படை பணியாளர்களை நியமித்திட உரிய அளவுகோல்கள் மற்றும் ஊதிய நிர்ணயம் மற்றும் பணியாட்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் நியமிக்க உரிய கருத்துருவினை தயாரித்து அனுமதி பெற்றுக்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி குடிநீர் திட்டத்தில் தலைமை நீரேற்று நிலையம், பூஸ்டர் நிலையம், மேல்நிலைத்தொட்டிகள் தொடர்புடைய கட்டமைப்புகளை இயக்கி பராமரித்தல் பணிக்கு போதிய நிரந்தர பணியாட்கள் இல்லாத காரணத்தினால், குடிநீர் விநியோக பணிகள் செவ்வனே செய்ய இயலாத நிலை ஏற்படுகிறது.

எனவே நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் வழங்கப்பட்டுள்ள அளவுகோல் ஊதியம் மற்றும் வழிமுறைகள் ஆகியவற்றின் அடிப்படையில் பணியாளர்களை வெளிகொணர்வு முகமை மூலமாக பணியமர்த்தும் பொழுது கடைபிடிக்க வேண்டிய நிபந்தனைகள்,

1. நிரந்தர பணியாட்களின் இருப்பு
2. தேவை ஏற்படின் அளவுகோலுக்கு மிகாமலும்
3. நகராட்சியின் நிதி நிலைமையினையும் கருத்தில் கொண்டும்
4. அடிப்படை ஊதியம், ESI,EPF,EDLI,GST மற்றும் சேவைக்கட்டணம்

மேற்கண்ட நிபந்தனைகளை அனைத்தையும் கருத்தில் கொண்டு மதிப்பீடு தயார் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு கருத்துருவினை வெளிக்கொணர்வு முகமை (Out Sourcing) மூலம் அனுப்பி குடிநீர் வழங்கல் மற்றும் தொடர்புடைய கட்டமைப்புகளை இயக்கி பராமரித்தல் பணிகளை திறம்பட செய்திடும் வகையில் கீழ்காணும் பணியாளர்கள் தேவையாக உள்ளது.

| வ.எண் | பணியின் விவரம் | பணியாளரின் பதவி விவரம் | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரை நாள்.20.07.2022 | | வெளிக் கொணர்வு முகமை (Out Sourcing) மூலம் தேவைப்படும் பணியாட்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | | | அளவுகோலின் படி கணக்கீடு | தற்போது உள்ள நிரந்தர பணியாட்கள் | |
| 1. | நீரேற்று நிலையம் பூஸ்டர் நிலையம் இயக்கி பராமரித்தல் | மின்னாளர் | 2 | 2 | 0 |
| | | பராமரிப்பு உதவியாளர் | 3 | 0 | 3 |
| 2. | குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் இயக்கி பராமரித்தல் | மின்னாளர் | 3 | 3 | 0 |
| | | பராமரிப்பு உதவியாளர் | 3 | 0 | 3 |
| | | மொத்தம் | 11 | 5 | 6 |

அளவுகோலின் படி இந்நகராட்சிக்கு 11 பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். தற்போது 5 எண்ணிக்கை நிரந்தர பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். எனவே கூடுதலாக 6 எண்ணிக்கை பணியாளர்கள் வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த வேண்டியுள்ளது.

<u>குடிநீர் தொடர்புடைய பராமரிப்பு பணி தனியார்மயமாக்குதல்</u>

| வ.எண் | விபரம் | கணக்கீடு | தொகை |
|---|---|---|---|
| 1 | பராமரிப்பு பணியாளர் கூலி | 6 x 578 x 225 | ரூ.7,80,300.00 |
| 2 | இ.பி.எப் | ரூ.7,80,300.00 X 12 % | ரூ.93,636.00 |
| 3 | இ.எஸ்.ஐ | ரூ.7,80,300.00 X 3.25% | ரூ.25,360.00 |
| 4 | நிர்வாக செலவுகள் | ரூ.7,80,300.00 X 5% | ரூ.39,015.00 |
| மொத்த மதிப்பீடு | | | ரூ.9,38,311.00 |

மேற்காணும் விவரப்படி தேவைப்படும் 6 பணியாளர்களை 15.08.2022 முதல் 31.03.2022 வரை வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்திக் கொள்ளவும் அதற்கான செலவினம் ரூ.9.38 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1272/2022/இ1)**

**அலுவலகக் குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**

**தீர்மான எண்.123**

பொருள் எண்.6

நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் கடிதம் K.Dis.No.4861/P3/2018 நாள்.22.02.2018ன் படி புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் ஒப்பந்த அடிப்படையில் **41** தனியார் தூய்மை பணியாளர்களைக் கொண்டு **06.06.2019** முதல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்பொழுது அனுமதி காலம் **30.06.2021** உடன் முடிவடைவதால் தனியாருக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் அனுமதி பெறும் வரை மேலும் ஒவ்வொரு மாத காலமாக நாளது வரை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் அரசாணை நிலை எண்.**101** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.**30.04.1997**ன் படி புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி தூய்மை பணிக்கு **116** தூய்மை பணியாளர்கள் தேவைபடுகிறார்கள் தற்பொழுது **31** நிரந்தர தூய்மை பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். பற்றாகுறையாக உள்ள **85** தூய்மை பணியாளர்கள் தேவைபடுவதால் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரை நாள்.**20.07.2022**படி **85** பணியாளர்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்திக் கொள்ள கீழ்காணும் விவரப்படி திட்ட மொழிவு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | விபரம் | கணக்கீடு | தொகை |
|---|---|---|---|
| 1 | பராமரிப்பு பணியாளர் கூலி | 85 x 578 x 360 | ரூ.1,76,86,800.00 |
| 2 | இ.பி.எப் | ரூ.1,76,86,800.00 X 12 % | ரூ.21,22,416.00 |
| 3 | இ.எஸ்.ஐ | ரூ.1,76,86,800.00 X 3.25% | ரூ.5,74,821.00 |
| 4 | நிர்வாக செலவுகள் | ரூ.1,76,86,800.00 X 5% | ரூ.8,84,340.00 |
| மொத்த மதிப்பீடு | | | ரூ.2,12,68,377.00 |

மேற்காணும் விவரப்படி தேவைப்படும் **85** பணியாளர்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்திக் கொள்ளவும் அதற்கான செலவினம் ரூ.**212.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.25/2016/எச்1)**

**அலுவலகக் குறிப்பு:—**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**

**தீர்மான எண்.124**

பொருள் எண்.7

நகராட்சி நிர்வாக இயக்குர், சென்னை அவர்களின் செயல்முறைகள் உத்திரவு ந.க.எண்.**11135/2022**/எம்3 நாள்.**19.05.2022**ன் படி ஈரோடு மாவட்டம், புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் அலுவலக பயன்பாட்டிற்கு ஸ்கார்பியோ வாகனம் ஒன்று அதன் விலை ரூ.**16,82,000/–** மதிப்பீட்டிலும், நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் அலுவலக பயன்பாட்டிற்கு பொலிரோ வாகனம் ஒன்று அதன் விலை ரூ.**8,27,742/–** மதிப்பீட்டிலும் அரசு நிர்ணயம் செய்யப்பட்ட (GEM Rate) விலைக்கு மிகாமல் விதிகளுக்குட்பட்டு வாகனம் வாங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட இரண்டு ஈப்பு வாகனங்களை பொது நிதியிலிருந்து வாங்கிக்கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.ண்.685/2022/இ1)**

**அலுவலகக்குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது

**தீர்மான எண்.125**

**பொருள் எண்.8**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு பவானிசாகர் மற்றும் அண்ணா நகர் நீரேற்று நிலையங்களில் குடிநீர் பராமரிப்பு பணிக்காக நான்கு நபர்களை தனியார் மூலமாக பணி அமர்த்தி கொள்ளும் பணிக்கு திரு.வி.ஜெயராஜ் என்பவருக்கு நிபந்தனைகளுக்கு உட்பட்டு இவ்வலுவலக செயல்முறை உத்திரவு ந.க.எண். இ1/387/2017 நாள்.27.05.2020ல், 01.06.2020 முதல் 31.05.2021 வரை ஓராண்டு ஒப்பந்த காலத்திற்கு நீட்டித்து பணி ஆணை வழங்கப்பட்டது. மேற்படி பணிக்கு புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோர கால தாமதம் ஆகும் என்பதால், குடிநீர் விநியோக பணி அத்தியாவசிய பணி என்பதால், இப்பணியின் அவசர அவசியம் கருதி தற்போதைய ஒப்பந்ததாரர் திரு.வி.ஜெயராஜ் என்பவருக்கு பழைய விலை விகிதத்தில் 01.08.2022 முதல் 31.08.2022 வரை ஒப்பந்த காலத்தை நீட்டித்து பணி ஆணை வழங்கப்பட்டது. தற்போது மேற்கண்ட ஒப்பந்தகாலம் 31.08.2022 உடன் முடிவடைவதால் குடிநீர் விநியோக பணி அத்தியாவசிய பணியாக உள்ளதாலும், தற்போதைய ஒப்பந்ததாரர் திரு.வி.ஜெயராஜ் என்பவருக்கு பழைய விலை விகிதத்தில் மேலும் ஒரு மாத காலத்திற்கு 01.09.2022 முதல் 30.09.2022 வரை ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்து குடிநீர் விநியோக பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க. எண்.387/2017/இ1)**

அலுவலக குறிப்பு:–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.126**

**பொருள் எண்.9**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணியில் தனியார் ஒப்பந்த அடிப்படையில் 1 முதல் 6 வார்டுகளில் 41 தூய்மை பணியாளர்கள் விபிஎன் பில்டார்ஸ், ஒப்பந்ததாரர், திருப்பூர் அவர்களுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.4861/P3/2018 நாள்.28.02.2018 அனுமதியின் படி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.25/2016/எச்1 நாள்.06.06.2019ன் படி பணி ஆணை வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியானது ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.25/2016/எச்1 நாள்.30.06.2019ன் படி நீட்டிப்பு செய்து பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிக்கான ஒப்பந்த காலம் 30.04.2022 உடன் முடிவடைவதால் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளும் வரை மேலும் ஒரு மாதம் (01.08.2022 முதல் 31.08.2022 வரை) பணியினை நீட்டிப்பு செய்யப்பட்டது. தற்பொழுது மேலும் ஒரு மாதம் (01.09.2022 முதல் 30.09.2022 வரை) விபிஎன் பில்டார்ஸ், திருப்பூர் ஒப்பந்ததாரர் அவர்களை பணி செய்ய அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.25/2016/எச்1)**

அலுவலகக்குறிப்பு :–

அ) மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.127**

**பொருள் எண்.10**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி ஈரோடு மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் பரவலாக காணப்படுகிறது. இருப்பினும் இந்நகராட்சி பகுதியில் இதுவரை டெங்கு காய்ச்சலால் பொதுமக்கள் பாதிக்கப்படாமல் தடுப்பு நடவடிக்கைகள் டெங்கு கொசுப்புழு ஒழிப்பு

பணியாளர்கள் வாயிலாக திறம்பட மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியானது ஈரோடு மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் ஏற்படா வண்ணம் முற்றிலும் தடுக்கப்படும் வரை இப்பணியினை தொடர்ந்து மேற்கொள்வது அவசியமாகிறது. எனவே பொது சுகாதார அவசர அவசியம் கருதி 10 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் திரு.வி.ஜெயராஜ், ஒப்பந்ததாரர், புன்செய்ப் புளியம்பட்டி என்ற தனியார் மூலமாக நகர் மன்ற தீர்மான எண்.125 நாள்.29.05.2020ன் படி டெங்கு காய்ச்சல் தொற்று நோய் தடுப்புப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியினை தொடர்ந்து 01.09.2022 முதல் 30.09.2022 வரை திரு.வி.ஜெயராஜ், ஒப்பந்ததாரர் அவர்களுக்கு இப்பணியினை நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.447/2017/எச்1)**

அலுவலகக்குறிப்பு :–

அ) மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.128**

<u>பொருள் எண்.11</u>

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி அலுவலகத்தில் தட்டச்சர் பணியிடம் இல்லாததால் கணினி தட்டச்சு செய்யும் பணிக்கு ஒரு நபரை தனியார் மூலமாக பணி அமர்த்தி கொள்ளும் பணிக்கு திரு.V.ஜெயராஜ் என்பவருக்கு நிபந்தனைகளுக்கு உட்பட்டு இவ்வலுவலக செயல்முறை உத்திரவு ந.க.எண். இ1/387/2017 நாள்.27.05.2020ல், 01.06.2020 முதல் 31.05.2021 வரை ஓராண்டு ஒப்பந்த காலத்திற்கு நீட்டித்து பணி ஆணை வழங்கப்பட்டதில், மேற்படி ஓராண்டு ஒப்பந்த காலம் 31.05.2021 உடன் முடிவடைந்ததாலும், 01.06.2021 முதல் 31.08.2021 வரை ஒப்பந்த காலத்தை மேலும் மூன்று மாத காலத்திற்கு நீட்டித்து தட்டச்சு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

இந்நிலையில், மேற்படி பணிக்கு புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோர கால தாமதம் ஆகும் என்பதாலும், திரு.V.ஜெயராஜ், ஒப்பந்ததாரர் அவர்களின் கடிதத்தின் படியும், அலுவலக பணியின் அவசர அவசியம் கருதி தற்போதைய ஒப்பந்ததாரர் திரு.V.ஜெயராஜ் என்பவருக்கு பழைய விலை விகிதத்தில் மேலும் 01.09.2022 முதல் 31.03.2023 வரை 7 மாத காலத்திற்கு மேற்படி ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்து தட்டச்சு பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந. க. எண்.387/2017/இ1)**

அலுவலக குறிப்பு:–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.129**

<u>பொருள் எண்.12</u>

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி 2020–21 மற்றும் 2021–22ஆம் ஆண்டிற்கான வளர்ச்சிப் பணிகள் விபரம் குறித்த விளம்பரம் தினகரன் நாளிதழில் கடந்த 11.06.2022 அன்று விளம்பரம் செய்யப்பட்டது. மேற்கண்ட விளம்பரம் பிரசூரம் செய்தமைக்கு KAL PUBLICATION PVT.LTD என்ற நிறுவனத்தார் ரூ.21,420/–க்கு பட்டியல் சமர்பித்துள்ளார். எனவே மேற்படி தொகையை மேற்கண்ட நிறுவனத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1335/2022/இ1)**

அலுவலகக்குறிப்பு :–

அ) மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.130**

**பொருள் எண்.13**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பகுதியில் 18 வார்டுகளிலும் சேகரமாகும் மக்கும் குப்பைகளை வாரச்சந்தையிலுள்ள Micro Compost Center (நுண் உயிர் குடில்)–க்கு கொண்டு சென்று அறைக்கப்பட்டு அதை உரமாக மாற்றி அருகில் உள்ள விவசாயிகளுக்கு தரப்படுகிறது. தற்சமயம் 3.00டன் கொள்ளளவு உள்ள குப்பைகள் அறைக்கும் இயந்திரத்தின் கன்வேயர் பெல்ட் மற்றும் பிளேடு தேய்ந்துவிட்டதால் மேற்கண்ட இரண்டு உபகரணங்களையும் மாற்றி புதிதாக பொருத்துவதற்கும், மேலும் மேற்கண்ட இயந்திரத்தை வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் வேண்டியுள்ளது. எனவே மேற்கண்ட பணி மேற்கொள்ள தொழில்நுட்பம் வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து முறையாக விலைப்புள்ளி பெற்று மேற்படி பணியை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.1462/2022/எச்1)**

அலுவலகக்குறிப்பு

அ) பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.131**

**பொருள் எண்.14**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.9514/2022/தி1.தூ.இ.தி நாள்.11.05.2022ன் படி நகரங்களின் தூய்மையான மக்கள் இயக்கத்தின் மூலம் ஒவ்வொரு 2வது மற்றும் 4வது சனிக்கிழமைகளில் திடக்கழிவு மேலாண்மை விதிகளின் படி மிக சிறப்பாக செயல்படுத்தும் நபர்களுக்கு சிறப்பு பரிசுகள் வழங்கி கௌரவப்படுத்தபட வேண்டியுள்ளது. எனவே வரும் காலங்களில், திடக்கழிவு மேலாண்மை விதிகளின் படி செயல்படுத்தும் நபர்களுக்கு நகராட்சியின் மூலமாக நினைவு பரிசுகள் மற்றும் கேடையம் வழங்கவேண்டியுள்ளது. எனவே அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.10,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.815/2022/எச்1)**

அலுவலகக்குறிப்பு :-

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது**
**தீர்மான எண்.132**

**பொருள் எண்.15**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.207289/2021/UPA1 நாள்.16.06.2022ன்படி புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலையோர வியாபாரிகளை கணக்கெடுப்பு செய்தல், அடையாள அட்டை மற்றும் வியாபார சான்று வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டதற்கினங்க, மேற்கண்ட பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 646/2016/எப்1)

அலுவலக குறிப்பு:–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது
தீர்மான எண்.133

பொருள் எண்.16

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.207289/2021/UPA1 நாள்.16.06.2022ன்படி புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலையோர வியாபாரிகள் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு அடையாள அட்டை மற்றும் வியாபார சான்று வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது. இதனை தொடர்ந்து 08.07.2022 ஆம் தேதியன்று மேற்படி பணிக்கு ஆன்லைனில் குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், எவ்வித ஒப்பந்தப்புள்ளியும் பெறப்படவில்லை.

இந்நிலையில் மீண்டும் 29.07.2022 ஆம் தேதியன்று Offline-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில், கீழ்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் சாலையோர வியாபார கணக்கெடுப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | M/s.J Engineers, Salem | ரூ.700/– (ஒரு நபருக்கு) |
| 2 | | M.s,SS Associates, Salem | ரூ.750/– (ஒரு நபருக்கு) |

மேற்காணும் பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகை குறிப்பிட்டுள்ள M/s.J Engineers, Salem அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 646/2016/எப்1)

அலுவலக குறிப்பு:–

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கப்படுகிறது
தீர்மான எண்.134

ஆணையாளர்
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி